2010 நவம்பர் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு முதல்வர்மீது கூறிய குற்றச்சாட்டும் அதேபோன்று மாண்புமிகு அமைச்சர் முன்னாள் முதல்வர்மீது கூறிய குற்றச்சாட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

### (உ) சிமெண்ட், கம்பி உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கட்டுமானப் பொருள்களுடைய விலை மிகப் பெருமளவில் உயர்ந்திருக்கிறது. குறிப்பாக சிமெண்ட் விலை எட்டிப்பிடிக்க முடியாத நிலைக்கு உயர்ந்திருக்கிற காரணத்தினாலும், கம்பி, ஜல்லி போன்ற பொருட்களுடைய விலை உயர்ந்திருக்கிற காரணத்தினாலும் கட்டுமானப் பணிகளில் மிகப் பெரிய தேக்க நிலை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. அண்டை மாநிலங்களிலேகூட விலை குறைந்திருக்கிறது. அதனால் இங்கே குறைப்பதற்குரிய முயற்சியை அரசு எடுத்திருக்கிறதா? (குறுக்கீடுகள்) சிமெண்ட், கம்பி, ஜல்லி விலை உயர்வின் காரணமாக கட்டுமானப் பணிகள் மிகப் பெரிய தேக்க நிலைக்கு ஆட்பட்டிருக்கிறது. சிமெண்ட் விலை உயர்வைக் குறைப்பதற்கான முயற்சி எடுக்கிற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில் நிறுவன அதிபர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியதற்குப் பின்னாலும் விலை குறைக்கப்படவில்லையே! அண்டை மாநிலத்திலே விலை குறைந்திருக்கிறது, தமிழகத்தில் விலை குறைக்கப்படவில்லையே! இதற்காக அரசு என்ன முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெளிவுபடுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடந்த விவாதத்திலேயும்,

[பேராசிரியர் க. அன்பழகன்] [2010 நவம்பர் 12

இன்றையதினம் எழுப்பப்பட்ட இந்த கவன ஈர்ப்பிலேயும் சிமெண்ட் விலை குறைக்கப்படவில்லையே, அதற்கு இந்த அரசு என்ன முயற்சி எடுத்தது என்று கேட்டிருக்கிறார்கள். தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கடந்த மாதத்திலேயும், இந்த மாதத்தினுடைய தொடக்கத்திலேயும் இரண்டு முறை பேசிய அந்த விவரங்கள் இருக்கின்றன. உற்பத்தியாளர்களையெல்லாம் அழைத்து ஒரு கூட்டம் நடத்தி, விலையைக் குறைத்தாக வேண்டிய அவசியத்தை அவர்களுக்கு வலியுறுத்தி, அவர்களும் ஓரளவுதான் எங்களால் முடியும் என்று சொல்லி, அதன் காரணமாக ஒரு மூட்டை 250 ரூபாய் என்ற அளவுக்கு அவர்கள் விற்பனையாளர்களுக்கு வழங்குவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அது போதாது, மேலும் குறைக்க வேண்டும் என்று தமிழக அரசின் சார்பாக கலைஞராலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. நாங்கள் மறுபடியும் ஆலோசித்துத்தான் குறைக்க முடியும்; குறைப்பதைப் பற்றிச் சொல்ல முடியும் என்ற நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். ஆனால், மக்களைக் கருதி, மக்களுடைய நலனைக் கருதி வெளிநாடுகளிலிருந்தோ, வேறு மாநிலத்திலிருந்தோ சிமெண்ட்டை விலை குறைவாக வரவழைத்து, போக்குவரத்துச் செலவினம் சேர்ந்து விலை குறைவாக அடங்குமானால், எவ்வளவு விரைவில் அப்படி வரவழைக்க முடியுமோ, அப்படி வரவழைத்து அந்த சிமெண்ட்டை மக்களுக்கு வழங்கலாம் என்று இந்த அரசு கருதிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிந்தது, அவ்வளவுதான்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடு)

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 156 முதல் 165 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.